சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



செய்திமடல் - 13 | 18-08-2011

## 11-08-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

## தலைப்பு : திருகோணமலை உள்ளூராட்சி தேர்தல் - ஒரு கள அனுபவம்

சத்தியதேவன் சற்குணம் அவர்களின் தொடக்கவுரையுடன் நிகழ்ந்த உரையாடலில் உரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு,

ஊள்ளூராட்சி சபைகள் இலங்கை அரச கட்டமைப்பில் மிகச்சிறிய அதிகார அலகாகும். குறிப்பிட்ட உள்ளூராட்சி எல்லைக்குள் வாழ்கின்ற மக்களால் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற குறித்த உள்ளூராட்சி எல்லைக்குள் ஆளுகின்ற குட்டி அரசாங்கமாகும். அத்துடன் இது மக்களுடன் நெருங்கிய தொடர்புடையது. பொதுச்சுகாதார வசதிகள், வீதி அபிவிருத்திகள், உட்கட்டமைப்பு வசதிகள், நூலகம், சனசமூக நிலையம், பாரம்பரிய வைத்தியசாலைகள், நாட்சந்தைகள், கடைகள் மற்றும் சிற்றுண்டிசாலைகள் ஆகியவற்றை நேரடியாக நிர்வாகம் மற்றும் ஒழுங்கு படுத்தும் அதிகாரம் இச்சபைகளுக்கு உரியது. இச்சபைகள் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுகின்ற தேர்தல் மூலம் மக்களால் தேர்தெடுக்கப்படுகின்றது. ஆகவே இத்தேர்தலில் மக்கள் பங்கேற்வேண்டியது அப்பகுதி மக்களின் நன்மைக்கு அவசிமானது.

ஊள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் தேசிய அளவிலான தேர்தலைப் போலல்லாது ஒரளவு சுதந்திரமாகவும் சுயத்தன்மைகொண்டதாகவும் அமைகின்றன்றது. தேசியளவிலான கட்சிகளின் அதிகாரங்களிலிருந்து ஓரளவு விடுபட்டு அப்பிரதேச நன்மைகருதி செயற்படும் வாய்ப்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு உள்ளது. தவிர அரசியலில் புதியவர்கள் நுழைவதற்கு வழியாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களே அமைகின்றன. திருகோணமலையில் இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் 50% இற்கும் அதிகமானோர் புதியவர்களாகவே இருந்தார்கள். சில இடங்களில் இது 80% ற்கும் அதிகமாகவும் காணப்பட்டது.

பெருமளவு வருமானங்களை கடந்த கால திருகோணமலை நகரசபை, பிரதேசசபைத் தலைவர்கள், உபதலைவர்கள் ஈட்டியபடியால் பிரதேசபை பதவிஎன்பது வருமானம் ஈட்டக்கூடிய ஒன்றாகவே கருதப்படுகிறது. இதனால் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் பெரும்பாலும் கட்டிட ஒப்பந்தக் காரர்களாகவும், பெரும் வியாபாரிகளாகவுமே காணப்படுகிறார்கள். தமிழ்க் கட்சிகளும் இதுவிடயத்தில் அக்கறை கொள்ளாமல் செலவில்லாமல் தமது கட்சி எப்படியாயினும் வெற்றிபெற்றால் சரி என்ற மனநிலையிலேயே செயற்படுகின்றன.

தனிப்பட்ட வேட்பாளர்களின் செல்வாக்கு என்பதை விட தமிழ்க்கட்சிக்கே வாக்குகள் என்ற நிலமையே தமிழ்த் தேசிய தரப்பில் காணப்படுகிறது. மறுபுறத்தே அரசாங்கத் தரப்பில் இது மறுதலையாக கட்சிகளுக்கல்லாமல் வேட்பாளர்களுக்கே வாக்குகள் எனறு காணப்படுகிறது. இதனால் அரசாங்க வேட்பாளர்கள் பெரும்பாலும் அதிக எண்ணிக்கையான குடும்ப உறுப்பினர்களையும் உறவினர்களையம் கொண்டவர்களாகவே தேர்வு செய்யப்பட்டார்கள். சிலர் செல்வாக்குள்ள இளைஞர் கழக இளைஞர்களாகவும் காணப்பட்டார்கள்.

ஊள்ளூராட்சி தேர்தல்களில் முக்கியமாக எமது கிராமத்தவர், எமது உறவினர், எமது சாதியச் சேர்ந்தவர் என்பன போன்ற உள்ளூர் தன்மைகள் முக்கியமானவையாகவும் தவிர்க்க முடியாதவையாகவும் காணப்பட்டன. சாதி என்ற விடயத்தைப் பொறுத்தவரை திருகோணமலையில் குறிப்பிட்ட ஒரு சாதியின் மேலாண்மை என்பதைவிட தத்தமது சாதி ஆதிக்கம் பெறவேண்டும் என்ற தன்மையே காணப்படுகிறது. உள்ளூராட்சி சபைத் தலைவராக வருபரே அபிவிருத்தி வேலைகளை அதிகமாக செய்ய முடியும் என்ற நிலை காணப்படுவதால் தாம் வாழ்கின் சூழலின் நன்மைகருதி மேற்குறிப்பிட்ட உள்ளூர்தன்மைகள் அழுத்தமாக மக்கள் மத்தியில் செல்வாக்கு பெறுகின்றன.

கிராமத்தின் அனைத்து சங்க நடவடிக்கைகளிலும், கூட்டங்களிலும், செயற்பாடுகளிலும் பெண்கள் பெருமளவு பங்கேற்ற போதும் அனைத்து கட்சிகளிலும் பெண்வேட்பார்கள் எண்ணிக்கை 1 அல்லது 2 ஆகவே காணப்பட்டது. சமூக செயற்பாடுகளில் தீவிரமாக பங்கெடுக்கின்ற கிராமப் பெண்கள் மத்தியில்க்கூட தேர்தல், அரசியல் என்பது ஆண்களுக்கானது எனற கருத்தே நிலவுகின்றது.

(மிகுதி அடுத்த பக்கம்)

### எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

18 - 08 -2011

**பெரியபுராணமும் அதன் அரசியலும்**
- சபா தனுஜன்

25 - 08 -2011

**வரலாற்றுப் பொருள்முதல்வாதம்**
- சி. சிவசேகரம்

01 - 09 -2011

**பகவத் கீதை**
- ஐ. மனோரா



ப. ஜீவானந்தம் (ஆகஸ்ட் 21, 1907 - ஜனவரி 18, 1963)

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு தியாகங்கள் பல புரிந்த பொதுவுடைமைத் தலைவர் ஆவார். காந்தியவாதியாக, சுயமரியாதை இயக்க வீரராக, தமிழ்ப் பற்றாளராக, அனைத்திற்கும் மேலாக ஒரு பொதுவுடைமை இயக்கத் தலைவராக படிப்படியாக உயர்ந்தவர். தம்மை நாத்திகராக அறிவித்துக் கொண்டவர்.1948 இல் கம்யூனிஸ்ட் கட்சித்தடை செய்யப்பட்டபோது இலங்கைக்குச் சென்று செயல்பட்டார்.மார்க்சிய கருத்துகளைத் தமிழில் சொல்வதற்கு ஜீவா பல புதிய சொல்லாட்சிகளை உருவாக்கியுள்ளார்

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## திருகோணமலையில் உள்ளூராட்சித் தேர்தல் முன் பக்கத் தொடர்ச்சி..

இந்நிலைமையை கருத்தில் கொண்டு பெண்களின் அரசியல் பங்களிப்பை ஊக்குவித்தல் எனும் நோக்கோடு செயற்பட்ட தேசிய அரசாற்ற நிறுவனம் அரசியலில் போட்டியிட விருப்புமுள்ள பெண்களை அழைத்து பயிற்சி வழங்கியது. இதன் போது தேர்தலில் போட்டியிட விரும்பிய பெண்கள் தத்தமது கட்சிகளை தாமே தெரிவு செய்து கொள்ள விடப்பட்டார்கள்.

இதனால் ஒரேதாக பயிற்சி அளிக்கப்பட்ட பெண்கள் வெவ்வேறு கொள்கையுடைய எதிர்ரெதிரான கட்சிகளில் போட்டியிட்டார்கள். சில இடங்களில் இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஒரே கிராமப் பெண்க்ள கூட வேறு வேறு கட்சிகளில் போட்டியிட வேண்டி ஏற்பட்டது. பேரும்பாலும் தமிழ்தேசிய தரப்பில் போட்டியிட தமிழ் பெண்கள் விரும்பிய போதும் பழமைவாத சிந்தனையுள்ள தமிழ்கட்சிகளின் தலைமை அதற்கு இடமளிக்கவில்லை. ஏற்கனவே தாம் தேர்தலில் போட்டியிடுவதாகப் பிரசாச்சாரம் செய்த அப்பெண்கள் இதனால் தேர்தலில் போட்டியிட்டால் போதும் என்று வாய்ப்பு வழங்கிய ஏதாவது ஒரு கட்சியில் போட்டியிட்ட நிலமையும் காணப்பட்டது.

சுனாமிக்குப் பின்னர் அனைத்து சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் தம்முள் உள்வாங்கிய அரசாற்ற நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் அரசியல் சார்பற்றவராக, அரசியலில் கலக்காதவராக இருத்தலே சிறந்தது என்ற அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சிந்தனையை, தாம் உள்ளவாங்கிய அனைத்து கிராமமட்ட சமூக மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் மத்தியில் ஆழமாக பதியச் செய்ததினால் சமூக மட்ட அமைப்புக்கள் தேர்தல் என்றாலோ அரசியல் என்றாலோ தமக்கு சம்பந்தமற்றதாகவே நோக்குகின்றன.

மேலும் அவை அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று செய்றபாடுகளை மேற்கொண்டு பழகியதன்மையையே தேர்தல் வேட்பாளர்களிடமும் கடைப்பிடிக்கின்றன. இது எமது சமூகத்தில் அரச சார்பற்ற அமைப்புகளால் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்று.

தேர்தல் கண்காணிப்புகளில் ஈடுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது கண்காணிப்பு பணிகளுக்க உதவியாக சக அரசசார்பற்ற நிறவனங்களையே நாடிய படியால் அவை பொருத்தமற்ற, தேர்தல் மற்றும் அரசியல் பழக்கமற்ற நபர்களையும் பெரும்பாலும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களையும் இக்கண்காணிப்பு பணிகளுக்கு வழங்கியிருந்தன. இது கண்காணிப்பை அர்த்தமற்றதாக்கியிருந்தது. இதற்கு மாறாக தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் சமூக அக்கறையுள்ளவர்களை இனங்கண்டு அவர்கள் மூலம் தேர்தல் கண்காணிப்பை செய்தல் பயனுடையது.

அரசியல் நீக்கப்பட்ட சமூகசேவையே சிறந்தது என்ற சிந்தனையை ஊன்றச் செய்த அரசாற்ற நிறுவனங்களுக்கு மாற்றாக பின்தங்கிய அரசியல் குழுக்களினது அரசியல் பங்களிப்பை ஊக்கப்படுத்தவும் தேர்தல் கண்காணிப்பு போன்ற அரசியல் முக்கிய நிகழ்வுகளில் அவற்றைப் பங்கெடுக்கச்செய்வதையும் நாம் முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டும்.

இறுதியாக உள்ளூராட்சி சபைத்தேர்தல்களில் முன்பு ஊழல் மற்றும் முறைகெடுகளில் பிரபலமாக அம்பலப்பட்டவர்களையும் வெறுமனே தம் அந்தஸ்த்துக்காக மட்டுமே தேர்தலில் போட்டியிடுகின்றேன் என கூறி போட்டியிடுகின்றவர்களையுமே மக்கள் தலைவர்களாகவும் உபதலைவர்களாகவும் தெரிவு செய்திருக்கிறார்கள். இந்த மனநிலை பற்றி விரிவாக உரையாட வேண்டும்

**சமூக விஞ்ஞான வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**

## பெரியபுராணமும் அதன் அரசியலும்

*18-08-2011* அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - சபா தனுஜன்

1. பெரிய புராணம் திருத்தொண்டர் புராணம் அறிமுகமும் அதன் தோற்றத்துக்கான பின்னணியும்

2. பெரிய புராணத்தை காவிய வரிசைக்குக் கொண்டு வரச் சேக்கிழார் கையாண்ட உத்தி.

3. சுந்தரர் காவியத் தலைவன் ஆனமைக்குப் பின்னாலுள்ள முரண்பாடு.

4. மாணிக்கவாசகர் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டமை.
5. பெரிய புராணத்தின் உள்ளடக்கம்.

- கண்ணப்ப நாயனார் புராணம் ஆகம - கிராமிய வழிபாடுகளுக்கிடையிலான மோதல்.

- மத வன்முறையின் பலமான வெளிப்பாடுகள். நந்தனார், சிறுத்தொண்டர், இயற்பகை நாயனார்.

---

பிறந்த வீட்டில்
கறுப்பி

அண்டை நாட்டில்
சிலோன் அகதிப்பொண்ணு

இலங்கை மத்தியில்
"தெமள"

வடக்கில்
கிழக்கச்சி

மீன்பாடும் கிழக்கில்
நானோர் மலைக்காரி

மலையில்
மூதூர்க் காரியாக்கும்

ஆதிக்குடிகளிடம்
திருடப்பட்ட தீவாயிருக்கும்
என் புகுந்த நாட்டில்
அப்பாடா!
பழையபடி நான் கறுப்பியானேன்

**-ஆழியாள்**
**(துவிதம்)**

உன்னிடமோ என்னிடமோ அவசரத்திற்கு சொற்கள்,
இல்லாததால்த் தான் செயல்களால் பேசவிழைகிறோம் ;
இதுபோல் இன்னொரு அவசரத்திற்கு இருவரும்
சொற்களாலோ செயல்களாலோ மன்னிப்போம்.

**-நிலா**

புதைக்கப்பட்ட எதிர்காலம்
செத்துக் கொண்டிருக்கும் நிகழ்காலம்
யாவும் கடந்து போக........
இறந்த காலத்தில் மட்டும் உயிர்ப்போடு
நான்.........

**-கஜேந்திரன்**